පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்
**Department for Registration of Persons**

# කාර්ය සාධන වාර්තාව-2012
# செயல் மதிப்பீட்டு அறிக்கை-2012
# PERFORMANCE REPORT-2012




සී-45, කැප්පෙටිපොල පාර, කොළඹ 05.
சி-45, கெப்பெட்டிபொல மாவத்தை, கொழும்பு-05.
C-45, Keppetipola Road, Colombo 05.

# செயல்  மதிப்பீட்டு அறிக்கை
# 2012

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| | நோக்கக் கூற்று | 1 |
| | பணிக் கூற்று | 1 |
| | நோக்கங்கள் | 1 |
| | பணிகள் | 2 |
| 2. | அடையாள அட்டை வழங்கல் | 3 |
| 3. | தேசி அடையாள அட்டை வழங்கலை விரைவு படுத்தும் வேலைத்திட்டம் | 6 |
| 4. | அடையாள அட்டை வழங்கல் செயற்பாடுகளுக்கான கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தல் | 7 |
| 5. | நடமாடும் சேவை | 8 |
| 6. | பயிற்சி வழங்கல் செயற்பாடுகள் | 8 |
| 7. | ஊக்கக் கொடுப்பனவு வழங்கல் | 9 |
| 8 | சட்டம் தொடர்பான கடமைகள் | 9 |
| 9. | பௌதிக வளங்கள் முகாமைத்துவம் | 10 |
| 10. | நிதி முன்னேற்றம் | 11 |
| 11. | பணிக்குழுக்கள் தொடர்பான தகவல்கள் | 12 |
| 12. | இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டம் | 13 |

# ஆட்பதிவுத் திணைக்களம்
# செயலாற்றுகை அறிக்கை
# 2012 ம் ஆண்டு

## 1. அறிமுகம்.

1968 ஆண்டின் 32 ம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக 1972 ம் ஆண்டு முதல் வயது 18 க்கு மேற்பட்ட இலங்கையில் நிரந்தரமாக குடியிருப்பவர்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் ஆரம்பமாகியது. அந்த சட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு ஏற்ப 1981 ம் ஆண்டிலிருந்து ஆட்களைப் பதிவு செய்யும் வயது 16 என்று ஆக்கப்பட்டுள்ளது.

### *நோக்கக் கூற்று*

குடிமக்களின் அடையாளத்தை நம்பத் தகுந்த விதமாக உறுதிப்படுத்தும் பொது மக்கள் சேவையினை வழங்குதல்.

### பணிக் கூற்று

1968 ம் ஆண்டின் 32 ம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் படி 16 வயது நிறைவுற்ற இலங்கை குடிமக்களை செயற்றிறன் மற்றும் பாதுகாப்பான முறையில் பதிவு செய்து அடையாள அட்டை வழங்குதல்.

### நோக்கங்கள்

1971 ம் ஆண்டின் 28 ம் இலக்க, 1971 ஆண்டின் 37 இலக்க மற்றும் 1981ம் ஆண்டின் 11 ம் இலக்க நியதிச் சட்டங்களால் திருத்தப்பட்ட
1968 ம் ஆண்டின் 32 ம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் நியதிச் சட்டத்துக்கு ஏற்ப ஆட்களைப் பதிவு செய்து அடையாள அட்டை வழங்குவதை முதன்மை நோக்காகக் கொண்ட இந்த திணைக்களம், ஆட்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் முதன்மை ஆவணமாக தேசிய அடையாள அட்டை வழங்கும் போது 21 வது நூற்றாண்டின் சவாலுக்கு முகம் கொடுக்கும் வண்ணம் முகாமைத்துவத்தின் ஊடாக அந்தப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கை சனநாயக சமதர்மக் குடியரசின் சட்டம் மற்றும் அமைதியைப் பாதுகாக்க உதவுவதுடன் அரச நிர்வாகத்துக்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பணிகள்**

- இலங்கையில் நிரந்தரமாக வசிக்கும் 16 வயது நிறைவடைந்த ஆட்களைப் பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கல்.
- திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளில் திருத்தங்கள் தேவைப்படின், தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்தல்.
- காணாமல் போன அடையாள அட்டைகளுக்குப் பதிலாக அவற்றின் இணைப்பிரதி ஒன்றை வழங்கல்.
- மேலே குறிப்பிட்ட சேவைகளை ஒரே நாளில் , ஒரே நாள் சேவையின் ஊடாக நிறைவேற்றிக் கொடித்தல்.
- அடையாள அட்டை வழங்கும் போது நிகழும் முறைகேடான செயல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- அடையாள அட்டை தொடர்பாக மற்றும் விண்ணப்பிக்கும் முறை தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுக்கும் தெளிவு படுத்தல்.
- நிறுவனம் மற்றும் திணைக்களத்தின் ஊடாக செய்யப்படும் வேண்டுகோள்களுக்கு அமைய அடையாள அட்டைகளில் தகவல்களை உறுதி செய்தல்.
- பொலிஸ் தெளிவாக்கலுக்காக தகவல்களை வழங்கல்.


2. **அடையாள அட்டை வழங்கல்.**

- சாதாரண சேவை

2012 ஆண்டில் ஜனவரி 01 ம் திகதி முதல் திசம்பர் 31 ம் திகதி வரையான காலப் பகுதியில் சாதாரண சேவையின் கீழ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| மாதம் | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 43027 | 66156 |
| பெப்ரவரி | 41584 | 49628 |
| மார்ச்சு | 46183 | 48355 |
| ஏப்பிரல் | 36203 | 32490 |
| மே | 53257 | 36784 |
| ஜூன் | 93711 | 37499 |
| ஜுலை | 136142 | 47003 |
| ஆகஸ்ட் | 72945 | 56528 |
| செப்டம்பர் | 63778 | 51631 |
| ஒக்டோபர் | 66788 | 71270 |
| நவம்பர் | 54860 | 71688 |
| டிசம்பர் | 45739 | 66356 |
| மொத்தம் | **754217** | **635388** |

மேலேயுள்ள வகைப்படுத்தலில் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடு, உரிய முறையில் பூரணப்படுத்தப் படாத மற்றும் வலிதற்றதாக்கப்பட்ட விண்ணப்பங்களாகும்.




- **ஒரே நாள் சேவை**

அவசர நிலைமைகளில் விரைவாக அடையாள அட்டைபெற்றுக் கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகளுக்காக ஒரே நாளில் அடையாள அட்டையை வழங்கும் விரைவு வேலைத்திட்டம் (ஒரே நாள் சேவை) 2003.09.01 ஆரம்பமாகியது. இதன் கீழ் ஒர் அடையாள அட்டைக்கு 500/- ரூபா அரசு அனுமதித்த கட்டணம் அறவிடப்படுகின்றது.


ஒரே நாள் வேலைத்திட்டத்தின் கீழ் 2012 ஆண்டில் ஜனவரி 01 ம் திகதி முதல் திசம்பர் 31 ம் திகதி வரை ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் ஊடாகதிணைக்களம் பெற்ற வருமானம் கீழ்வருமாறு :

| மாதம் | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 11191 | 5,595,500 |
| பெப்ரவரி | 10349 | 5,174,500 |
| மார்ச்சு | 12598 | 6,299,000 |
| ஏப்பிரல் | 7058 | 3,529,000 |
| மே | 10490 | 5,245,000 |
| ஜூன் | 13001 | 6,500,500 |
| ஜலை | 13926 | 6,963,000 |
| ஆகஸ்ட் | 13275 | 6,637,500 |
| செப்டம்பர் | 11752 | 5,876,000 |
| ஒக்டோபர் | 12749 | 6,374,500 |
| நவம்பர் | 15705 | 7,852,500 |
| டிசம்பர் | 14440 | 7,220,000 |
| மொத்தம் | 146534 | 73,267,000 |



- **விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கல்**

| ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1972 | 1,305,801 | 22,459 | 1993 | 528,628 | 468,494 |
| 1973 | 5,570,696 | 680,024 | 1994 | 545,121 | 493,093 |
| 1974 | 619,855 | 5,071,234 | 1995 | 907,560 | 616,915 |
| 1975 | 72,268 | 248,694 | 1996 | 816,275 | 853,191 |
| 1976 | 138,216 | 246,694 | 1997 | 782,988 | 636,187 |
| 1977 | 152,221 | 221,783 | 1998 | 771,597 | 655,580 |
| 1978 | 236,834 | 423,276 | 1999 | 731,079 | 753,560 |
| 1979 | 186,813 | 194,436 | 2000 | 758,463 | 651,787 |
| 1980 | 360,510 | 297,702 | 2001 | 711,295 | 679,250 |
| 1981 | 479,724 | 474,577 | 2002 | 794,357 | 700,000 |
| 1982 | 425,904 | 505,559 | 2003 | 633,168 | 635,046 |
| 1983 | 358,830 | 342,088 | 2004 | 607,111 | 524,241 |
| 1984 | 451,651 | 421,010 | 2005 | 731,310 | 564,872 |
| 1985 | 446,619 | 458,557 | 2006 | 1,196,276 | 897,674 |
| 1986 | 364,150 | 374,074 | 2007 | 1,086,236 | 958,445 |
| 1987 | 372,108 | 353,819 | 2008 | 933,663 | 818,407 |
| 1988 | 431,102 | 409,870 | 2009 | 986,670 | 941,537 |
| 1989 | 365,966 | 333,083 | 2010 | 899,349 | 890,084 |
| 1990 | 491,622 | 397,135 | 2011 | 752,399 | 835,548 |
| 1991 | 676,681 | 646,150 | 2012 | 900,751 | 781,922 |
| 1992 | 568,493 | 545,957 | மொத்தம் | **30,150,360** | **26,065,569** |



3. **தேசிய அடையாள அட்டை வழங்கலை விரைவு படுத்தும் வேலைத் திட்டம்**

- தற்காலிக எழுதுவினைஞர் ( தமிழ் மொழி ) ஆட்சேர்ப்பு செய்தல்.

  தேசிய அடையாள அட்டை தயாரிப்பதற்காக விசேடமாகசேர்த்துக் கொள்ளப்பட்ட திணைக்கள் ஊழியர்களாகிய தயாரிப்பு உதவியாளர்கள் இடையே தமிழ் மொழியில் எழுத வேண்டிய அடையாள அட்டைகளை தமிழில் எழுதக் கூடியவர்கள் குறைவாக இருப்பதன் காரணமாக தமிழ் மொழியில் அடையாள அட்டை வழங்குதலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

  இது தொடர்பாக அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சிற்குச் செய்யப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு அமைய அந்த அமைச்சின் ஊடாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் (UNDP) உதவியின் கீழ் செயல்படுத்தப் படும் நீதிக்கான சம வாய்ப்பு (Equal Access to Justice) செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 16 பேர் ஆரம்பத்தில் ரூபா 9000/- மாதாந்த கொடுப்பனவாக வழங்கல் தற்காலிக நியமனம் என்ற அடிப்படையில் தற்காலிக எழுதுவினைஞர் ( தமிழ் மெழி ) சேர்த்து கொள்ளப்பட்டார்கள். அவ் வுத்தியோகத்தர்கள்பின்வரும் முறையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதற்கான ஒதுக்கீட்டு நிதி மேலே கூறிய செயற்றிட்டத்தின் கீழ் பெறுக் கொள்ளப்படுகின்றது.

| கால வரையறை | எழுதுவினைஞர் எண்ணிக்கை | கொடுப்பனவு முறை |
|---|---|---|
| 2009.08.07 - 2009.11.06 | 16 | மாதாந்த கொடுப்பனவு ரூ. 9000/- |
| 2009.11.16 - 2010.03.15 | 16 | |
| 2010.04.15 - 2010.08.31 | 23 | மாதாந்த கொடுப்பனவு ரூ. 10000/- |
| 2010.09.15 - 2011.02.14 | 07 | மாதாந்த கொடுப்பனவு ரூ. 15000/- |
| 2010.10.04 - 2011.02.14 | 23 | |
| 2011.08.01 – 2011.12.31 | 07 | |
| 2012.01.04 – 2012.05.31 | 07 | |
| 2012.06.06 – 2012.07.31 | 07 | |
| 2012.08.01 – 2012.12.31 | 07 | |

- **சிவில் பாதுகாப்பு அலுவலர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல்.**

  தேசிய அடையாள அட்டை தயாரித்தல் பணிகளுக்கு நேரடி பங்களிப்பான தயாரிப்பு உதவியாளர் தொகுதி அலுவலர்கள் பதவி உயர்வு பெற்று வேறு சேவைகளுக்குச் சென்று விட்ட காரணத்தினால் அடையாள அட்டை தயாரிப்பில் ஈடுபடுத்தப்படக் கூடிய அலுவலர்கள் மட்டுப்படுத்தப்பட்டு விட்டனர். இதனால், சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் 47 பேர் 2010.09.20 ம் திகதி முதல் இந்த திணைக்களத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். 2012 ஆண்டு ஜனவரி மாதத்தில் 46 பேராக இருந்த அலுவலர்கள் பின் 54 *பேராக* அதிகரிக்கப்பட்டனர்.

- **செய்முறைப் பயிற்சி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல்.**

**மேற்குறிப்பிட்ட** அலுவலர்களுக்கு மேலதிகமாக தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சி பெற்ற மாணவர்களையும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நாளொன்றுக்கு ரூபா 500 என்ற கொடுப்பனவு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

| கால வரையறை | பயிலுனர்களின் எண்ணிக்கை | தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|
| 2011.08.10 – 2012.02.09 | 6 | தேசிய இளைஞர் சேவை மன்றம் |
| 2011.08.15 – 2012.02.14 | 4 | லலித் அதுலத்முதலி தொழிற்பயிற்சி நிலையம் |
| 2011.12.08 – 2012.06.07 | 1 | தொழிற்பயிற்சி நிலையம் தெஹிவளை |
| 2012.04.02 – 2012.10.01 | 4 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை |
| 2012.04.20 – 2012.10.19 | 1 | தொழிநுட்ப கல்லூரி கம்பஹ |
| 2012.10.01 – 2013.03.31 | 2 | இலங்கை கொரிய தொழிநுட்ப கல்லூரி |

4. **அடையாள அட்டை வழங்கல் பணிகளின் பொருட்டு கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தல்.**

- கணினிக்கு அமைய இலக்கம் இடுதல்.

முதல் முறையாக வழங்கப்படும் அடையாள அட்டை தொடர்பில் இலக்கம் வழங்குதல் 2007 ஜனவரி 01 ம் திகதி முதல் திணைக்களத்தில் இடம் பெறுகின்றது. 2012 ஜனவரி முதல் திசம்பர் மாதம் வரைக்கும் இலக்கம் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு:-

| மாதம் | இலக்கம் இடப்பட்ட அடையாள அட்டைகள் |
|---|---|
| ஜனவரி | 16,991 |
| பிப்ரவரி | 16,790 |
| மார்ச்சு | 20,121 |
| ஏப்பிரல் | 14,587 |
| மே | 19,944 |
| ஜூன் | 28,360 |
| ஜூலை | 39,922 |
| ஆகஸ்ட் | 55,301 |
| செப்டம்பர் | 56,151 |
| ஒக்டோபர் | 56,951 |
| நவம்பர் | 53,727 |
| டிசம்பர் | 19,393 |
| மொத்தம் | 398,238 |

- கணினி சுட்டிகள் வழங்கல்.

  தொலைந்து போன அடையாள அட்டைகள், தொடர்பில் இணைப் பிரதி வழங்கும் போது மற்றும் வைத்திருக்கும் அடையாள அட்டையில் திருத்தங்கள் செய்யும் போது தேவைப்படும் திணைக்கள அறிக்கை ( சுட்டிகள் ) வழங்குதல் கையால் செய்யப்பட வேண்டிய ஒரு பணியாகும். தற்போது அந்த சுட்டெண்கள் கணினி மயப்படுத்தப் பட்டுள்ளதால் அவை கணினி ஊடாக ஆய்வு செய்யப்படுகின்றன.

### 5. நடமாடும் சேவை.

தேர்தலில் வாக்களித்தலுக்கு அடையாள அட்டை கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நடமாடும் சேவை விரைவாக இடம் பெறச் செய்ய வேண்டியுள்ளது. இந்த நடமாடும் சேவை ஊடாக தூர இடங்களில் வசிக்கும் மக்களிடம் போய் பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களைப் பொறுப்பேற்றல் இடம் பெறுகின்றது. நிலைய மட்டத்தில் செயற்படுத்தப் படும் நடமாடும் சேவை வேலைத் திட்டத்தின் கீழ் 2012 ஜனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரைக்கும் 28,582 அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளது.

### 6. பயிற்சி வழங்கல் செயற்பாடுகள்.

இத்திணைக்களத்திலுள்ள சிங்கள உத்தியோகத்தர்களுக்காக அரச கரும மொழிகள் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற விரிவுரையாளர் மூலம் தமிழ்மொழி சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.இதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களின்செயற்திறன் மதிப்பீட்டினை அதிகரிக்கும் முகமாக 4 பயிற்சி பாடத்திட்டங்கள் திணைக்கள வளாகத்தில் நடைபெற்றன.

அரச சேவை பயிற்சி நிலையத்தினூடாக நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2012 ம் ஆண்டு 298 பேர் கலந்து கொண்டுள்ளனர் .

திணைக்கள செயற்பாடுகளை திறமையாக செயற்படுத்துவதற்கும் பொது மக்களுக்கான விரைவான சேவையினை வழங்குவதுமே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதனை பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது.

திணைக்கள வளாகத்தில் நடைபெற்ற பயிற்சி வேலைத் திட்டங்கள்.

| தொடர் இலக்கம் | இடம் பெற்ற பயிற்சி வேலைத் திட்டங்கள் | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சிறந்தபொது மக்கள் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளல் தொடர்பாக | 100 |
| 2. | மன உளைச்சளை கட்டுப்படுத்தி சேவையாற்றல் தொடர்பான பயிற்சி | 105 |
| 3. | தனியார் ஆளுமை விருத்தி பயிற்சி | 100 |
| 4. | அடிப்டை செயற்திறன் மதிப்பீட்டினை அறிமுகம் செய்தல் தொடர்பான பயிற்சி | 200 |
| 5. | தமிழ்மொழி பயிற்சிப் பாடத்திட்டம் (9 மாதம்) | 125 |

- **அரச** சேவை பயிற்சி நிலையத்தினூடாக வழங்கப்படுகின்ற பயிற்சிகளிற்கு உத்தியோகத்தர்களை அனுப்புதல்.

| தொடர் இலக்கம் | இடம் பெற்ற பயிற்சி வேலைத் திட்டங்கள் | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உயர் கணணி பயிற்சி | 30 |
| 2. | சேவை ஆரம்பப் பயிற்சி | 54 |
| 3. | ஓய்வூதிய நடவடிக்கைகள் | 8 |
| 4. | அடிப்படை கணணி பயிற்சி | 135 |
| 5. | அலுவலக முகாமைத்துவம் | 14 |
| 6. | தனிப்பட்ட கோவை பராமரிப்பு பயிற்சி | 9 |
| 7. | பயனுறுதி மற்றும் அரச சேவை தரத்தை விருத்தி செய்வதற்கான பயிற்சி | 11 |
| 8. | களஞ்சியப்படுத்தல் மற்றும் கொள்வனவு நடைமுறைகள் | 3 |
| 9. | ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பான பயிற்சி | 3 |
| 10. | செயற்திட்ட முகாமை | 1 |
| 11. | அரச நிதி முகாமை | 13 |
| 12. | அரசாங்க கணக்காய்வு நடவடிக்கைகள் | 5 |
| 13. | ஒழுக்காற்று நடவடிக்கை செயலொழுங்கு | 6 |
| 14. | அ.மு.உ.சேவை உயர்த்தரத்திலுள்ள உத்தியோகத்தினருக்கான பயிற்சி | 1 |
| 15. | அ.உ. சேவை பணி முன்னேற்றம் பற்றிய பயிற்சி | 3 |
| 16. | சிறாப்பரின் கடமைகள் பற்றிய பயிற்சி | 1 |
| 17. | சம்பள மாற்றம் பற்றிய பயிற்சி | 1 |

### 7. ஊக்கக் கொடுப்பனவு வழங்கல்

2003 ம் ஆண்டு முதல் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளின் பேரில் ஒரே நாளில் அடையாள அட்டை வழங்கும் பொருட்டு ஒரு நாள் சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த ஒரு நாள் சேவை பணிக்குழு தொடர்பான முறையான அனுமதியுடன் ஊக்கக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இவ்வூ**க்கக் கொடுப்பனவானது** 2012 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

### 8. சட்டம் தொடர்பான கடமைகள்

குறைபாடுகள் கொண்ட விண்ணப்ப படிவம் சமர்ப்பித்தல், ஐயம் கொள்ளக் கூடிய விண்ணப்ப படிவ இலக்கத்தை உறுதிப் படுத்தல், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊடாக கோரப்படும் விளக்கங்களுக்குப் பதில் அளித்தல், ஐயத்துக்கிடமான பிறப்புச் சான்றிதழை ஆய்வு செய்தல் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தினை மீறுதல் போன்றவற்றிற்கு தண்டம் அறவிடல் போளன்றவை தொடர்பில் 2012 ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சம்பந்தமான விபரம் இணைப்பு I ல் தரப்பட்டுள்ளது:-

## 9. பௌதிக வளங்களை முகாமைத்துவம் செய்தல்

- காணிகள் மற்றும் கட்டிடங்கள்

இலக்கம் 45, கெப்பிட்டிபொலை வீதி, கொழும்பு - 05 என்ற இடத்தில் அமைந்திருக்கும் கட்டிடங்கள் திணைக்களத்துக்குச் சொந்தமானது

புதிய ஒருநாள்சேவை கட்டிடமானது 2012 ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- வாடகைக்கு எடுத்தல்

திணைக்களம் அடையாள அட்டைகளைக் களஞ்சியப் படுத்துவதன் பொருட்டு நுகேகொடையில் அமைந்துள்ள 12,180 சதுர அடி பரப்பளவுள்ள " யமுனா கட்டிடத்தை " சகல குத்தகைத் தொகையுடன் ரூபா 532,000/= மாதாந்த வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

- ஏனைய சொத்துக்கள்

தற்போது திணைக்களத்துக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :-

| இலக்கம் | வாகனம் | கொள்வனவு செய்த திகதி | கொள்வனவு செய்த பெறுமதி |
|---|---|---|---|
| 202 – 9519 | முச்சக்கர வண்டி | 1997.02.06 | 133465.00 |
| NA 2147 | L 300 வேன் | 2006.05.24 | 4450000.00 |
| KB 8577 | மோட்டார் வாகனம் | 2006.05.25 | 3400000.00 |
| PA 9855 | L 300 வேன் | 2006.11.22 | 4250000.00 |
| KF 6282 | மோட்டார் வாகனம் | 2007.12.17 | 1935000.00 |
| PB 6775 | L 300 வேன் | 2008.08.26 | 6250000.00 |
| KH 3686 | மோட்டார் வாகனம் | 2008.09.02 | 3750000.00 |
| PC 3265 | கெப் வாகனம் | 2011.06.28 | 2627353.00 |
| KP 5832 | ஜீப் வாகனம் | 2011.08.18 | 4587528.00 |
| WP 6059 | மோட்டார் சைக்கிள் | 2011.06.14 | 104496.00 |
| PE 1266 | கெப் வாகனம் | 2012.06.12 | 7500000.00 |

10. **நிதி முன்னேற்றம்.**

2012 ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு மற்றும் செலவுகள் பின்வருமாறு

- **திணைக்கள** மதிப்பீடு மற்றும் செலவுகள்

| இல. | செயற்பாடுகள் | செலவு திட்டம் (ரூ .ஆயிரத்தில்) | செயல்மதிப்பீடு (ரூ .ஆயிரத்தில்) | | % |
|---|---|---|---|---|---|
| 1. | தனிநபர் சம்பளம் | 158,470 | நிதி | 136,460 | 86% |
| | | | பௌதீக | | |
| 2. | ஏனைய வருமானச் செலவுகள் | 46,070 | நிதி | 38,752 | 84% |
| | | | பௌதீக | | |
| 3. | மூலதனச் செலவுகள் | 47,050 | நிதி | 42,521 | 90% |
| | | | பௌதீக | | |

- இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டம்

| இல. | செயற்பாடுகள் | செலவு திட்டம் (ரூ .ஆயிரத்தில்) | செயல்மதிப்பீடு (ரூ .ஆயிரத்தில்) | | % |
|---|---|---|---|---|---|
| 1. | இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டம் | 1,250,000, | நிதி | 65,337 | 5% |
| | | | பௌதீக | | |

மூலதனச்செலவு வகைக்குள் அடையாள அட்டை தயாரிப்புக்கு தேவையான லெமினேடிங் ரோல் கொள்வனவு செய்வதற்காக ரூபா . 22 மில்லியன் செலவு ஏற்பட்டதுடன் (Insert) கார்ட் இறக்குமதிசெயவதற்காக ரூபா . 9.4 மில்லியன் செலவ ஏற்பட்டுள்ளது.

2012.12.31 ம் ஆண்டுக்காண ஒரு நாள் சேவை மூலம் கிடைத்த வருமானம் ரூபா.73,267,000/- ஆனதுடன் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 146,534 ஆகும்.

2012 ம் ஆண்டின் வருமானம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கின் சுருக்கம் இணைப்பு (II) இல் காணலாம்

11. **பணிக்குழுக்கள் தொடர்பான தகவல்கள்**

I. ஓய்வு பெற்றுச் செல்லல்

- பொது முகாமைத்துவ சேவை உதவியாளர்களின் எண்ணிக்கை 10
- அலுவலக பணியாளர் எண்ணிக்கை 03

II. சேவையில் நின்றும் விலகல்

- பொது முகாமைத்துவ சேவை உதவியாளர் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர் ஒருவர் சேவையில் நின்றும் விலகிவிட்டார்

III. இடமாற்றம் பெற்றுக் கொள்ளல்

- இலங்கை நிர்வாக சேவை அலுவலர் மூன்று பேர்
- கட்டாயத்தின் பேரில் அலுவலர் ஏழு பேர்
- பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்த்த 15 பேர்
- தரவு நிரல்படுத்தல் அலுவலர் ஒருவர்
- வாகன சாரதி சேவை ஒருவர்
- அலுவலக பணியாளர் சேவையைச் சேர்ந்த 5 பேர்

IV. விடுவிக்கப் படல்

- கட்டாயத்தின் பேரில் அலுவலர் ஒருவர்
- பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்த்த 5 பேர்

V. பதவி உயர்வு

- பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II இனைச் சேர்ந்த ஒருவர் வகுப்பு I இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.
- பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்த ஒருவர் வகுப்பு II இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பணியாளர் எண்ணிக்கை பற்றிய விபர அறிக்கை இணைப்பு (II காணலாம்.

## 12. இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டம்

### *1. அறிமுகம்*

*2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க பாதுகாப்பான மையப்படுத்தப்பட்ட இலத்திரனியல் பிரஜைகள் பதிவுத் தரவு மையம் , ஒருங்கிணைக்கப்பட்ட இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் செயற்திட்டம் மற்றும் தரவுகளை மீளுறுதி செய்யும் நடைமுறை என்பவற்றுக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றது. ஜனாதிபதி வழிகாட்டல் குழுவினால் தனக்கு சாட்டப்பட்ட பொறுப்புக்களின் அடிப்படையில் இந்த கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான பொருத்தமான சேவை வழங்குனரைத் தெரிவு செய்வதற்கான விலை மனுக்கோரும் முன் மொழிவுகளை தயாரிக்கும் பொறுப்பினை லங்கா லொஜிஸ்ரிக் மற்றும் டெக்னொலொஜிஸ்ட் நிறுவனம் எற்றுக் கொண்டது.தேசிய ஆட்பதிவத் தரத்தினை நிறுவுவதற்கான சேவை வழங்குனரை தெரிவு செய்யவும், மரபு ரீதியாக திரட்டப்பட்ட தரவுகளை இலத்திரனியல் தரவாக மாற்றுவதற்குமான சேவை வழங்குனரைத் தெரிவு செய்வதற்கான விலை மனுக்கோரல் முன் மொழிவுகளை மேற்கொண்டார்கள்.*

*மேற் குறிப்பிடப்பட்ட அமைச்சரவை தீர்மானம் மூலம் கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகு ஒன்றை ஆட்பதிவுத் திணைக்களத்தில் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதற்கமைய மேற் குறிப்பிட்ட கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகு 2012ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்ட ஒறுங்கினைப்பு அலகின் வேலைத்திட்டங்களை மேற் கொள்வதற்காக செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட அலுவலர்களையும் கொண்டு 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியின் அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக இக் கருத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. மேற் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை திணைக்களத்திலிருந்து தற்காலிகமாக விடுவிக்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. அம் முயற்சி 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடுப்பகுதியில் பூர்த்தியடைந்தது.*

*2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானம் திருத்தத்துடன் திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கத்தினை விரைவுபடுத்துவதை நோக்காகக் கொண்டு 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற கருத்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய செயற்திட்ட முகாமையாளராக செயற்பட்ட லங்கா லொஜிஸ்டிக் மற்றும் டெக்னொலொஜிஸ்ட் நிறுவனம் செயற்திட்ட ஆலோசகராகவும் , செயற்திட்ட ஆலோசகராக செயற்பட்ட ஆட்பதிவுத் திணைக்களம் செயற்திட்ட முகாமையாளராகவும் வகிபாகங்கள் மாற்றப்பட்டன.*

*2012.10.14 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி உபதேச குழுவின் கூட்டத்தின் போது கருத்திட்டத்தின் வேலைகளை விரைவாக நடாத்துவதற்காக கருத்திட்ட செயன்முறைகளை இரண்டு கட்டங்களாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது.*

1. *மரபு ரீதியாக சேர்த்துக் கொள்ளப்படும் பிரஜைகளின் தரவுகள் தரவேற்றப்பட்டு இலத்திரனியல் மயப்படுத்தல்*
2. *சேவை தளத்தை அமைத்தல்*

2. **கருத்திட்ட முன்னேற்றம்**

பணிக் குழு ஆட்சேர்ப்பு

*முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2012 இறுதி அரையாண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆட் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட பணிக்குழு பின் வருமாறு*

| அனுமதிக்கப்பட்ட நிலை | அனுமதிக்கப்பட்ட தொகை | இணைத்துக் கொள்ளப்பட்ட திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| கருத்திட்டப் பணிப்பாளர் | | )7-2012 | |
| தொழில் நுட்ப முறைமை நிருவாக உத்தியோகத்தர் | | பப்படவில்லை | உதவிப் பணிப்பாளர் தொழில் நுட்பம் அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. |
| கருத்திட்டக் கணக்காளர் | | )7-2012 | திணைக்கள பிரதான கணக்காளர் 2013 மார்ச் மாதத்திலிருந்து பகுதி நேர கணக்காளராக சேர்த்துக் கொள்ளப்பட்டார் |
| கொள்முதல் நிபுனர் | | பப்படவில்லை | 2012 டிசம்பர் இறுதி வரை தகுதியான விண்ணப்பதாரர் நேர் முகப் பரீட்சையை எதிர் நோக்க வில்லை. குறிப்பிட்ட தேவைப்பாடானது மேல் மாகாண பிரதான பொறியியலாளரால் பூரணப்படுத்தப்படுகிறது.<br><br>கொள்முதல நிபுனராக சிவில் பொறியியல் பின்னியுடைய ஒருவர் 2013 மே மாத இறுதியில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளார் |
| கண்கானிப்பு மற்றும் முறைப்பாட்டு அலுவலகர் | | பப்படவில்லை | இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்ட விண்ணணப்பதா இது வரை சமுகம் தரவில்லை |
| தொழில் நுட்ப உத்தியோகத்தர் | | 2.2012 மற்றும் 01.01.2013 | ஒருவர் 2012 ஒக்டோபர் மாதத்திலும் அடுத்த உத்தியோகத்தர் 2013 ஜனவரி மாதத்திலும் இணைக்கப்பட்டுள்ளார் |
| கருத்திட்ட உதவியாளர் | | 2 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் | 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 4 உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் கருத்திட்ட உதவியாளர் என்ற பதவிக்கு விடுவிக்கப்பட்டார்கள் |
| முகாமைத்துவ உதவியாளர் | | 2 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் | மூன்று உத்தியோகத்தர்கள் திணைக்களத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட போதிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமையை பொறுப்பேற்றுள்ளார்கள் |
| அலுவலக உதவியாளர் | | 2 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் | |
| சாரதி | | 2 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் | |

*முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் கருத்திட்டத்தின் செயற்பாடுகளை செய்வதற்காகவும் பிரஜைகள் தரவு மையத்தை செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு (சே) ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்திற்கும் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இத்திணைக்களத்தின் கிளைக் காரியாலயத்திற்கும் இணைத்துக் கொள்வதற்காக 800 பட்டதாரிப் பயிலுனர்கள் மாவட்ட மட்டத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றதோடு 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் இறுதிப் பகுதியில் பட்டதாரிகள் ஆட்சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையின் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் நடைபெற உள்ளன.*

*தலைமை அலுவலகத்தின் கட்டிட நிர்மானம்*

*இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இணைந்ததாக நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டங்கள் நடாத்தப்படுவதோடு அலுவலகத்திற்குத் தேவையான உபகரணங்கள் 2012 ஆம் ஆண்டின் இறுதி அரைப் பகுதியில் கீழ் காணப்படும் வகையில் கொள்முதல் செய்யப்பட்டது.*

*2.2.1 தளபாடங்கள்*
*3.3 மில்லியன் ரூபா பெறுமதியான காரியாலயத்திற்கு அவசியமான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.*

*2.2.2. 12 மில்லியன் ரூபா பெறுமதியான கணணிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.*

*2.2.3 16 மில்லியன் ரூபா செலவில் கணணிக் கிளை நவீனமயப்படுத்தல் மற்றும் ீயசவவைழை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.*

*தளபாடங்களும் உபகரணங்களுடனும் கருத்திட்டக் காரியாலயம் நிர்மாணிக்கப்படல்*

*ரூபா 3.7 மில்லியன் செலவில் திணைக்களத்தின் வரையறுக்கப்பட்ட இடப்பிரதேசத்தினுல் கருத்திட்டக் காரியாலயம் அமைக்கப்பட்டது.*

*ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலக நிர்மாணம்*

*பிரதேச செயலகங்களின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் காரியால செயற்பாடுகளை இலகுவாக்கும் முகமாகவும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காகவும் மாவட்ட மற்றும் பிரதேச காரியாலயங்கள் அமைக்கப்பட உள்ளதோடு வடக்கின் பிரதேச காரியாலயம் வவுனியா மாவட்டத்திலும் கிழக்கின் பிரதேச காரியாலயம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.*

*2.5 பிரதேச செயலகங்களில் கிளைக் காரியாலயங்கள் நிர்மாணித்தல்*

*பிரதேச செயலகங்களில் திணைக்களத்தின் கிளைக் காரியாலயங்கள் நிர்மாணிக்கும் செயற்பாடு 4 -5 வருடங்களுக்கு முதல் ஆரம்பிக்கப்பட்டதோடு 2010 ஆம் ஆண்டில் 311 பிரதேச கிளைக் காரியாலயங்களின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்தது. இக் கருத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதோடு கருத்திட்டத்திற்குப் பொருத்தமான வகையில் 332 பிரதேச செயலகக் கிளைக்காரியாலயங்களையும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*2.6 நிதி நிலைமை*

*இவ் வருடம் கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 120 மில்லியனான போதிலும் அவ் வருடத்திற்கான மொத்த செலவினம் 44.9 மில்லியன்*
*மூலதனச் செலவு - 41,022, 493*
*மீண்டெழும் செலவுகள் - 03, 887, 025*

*1200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் குறைந்த செலவினத்திற்கான பிரதான காரணம் அடிப்படை முறைமைகளும் சேவைகளும் விருத்தி செய்வதற்கான ஐஊவு ஆல் வழங்கப்படும் கீழ் கட்டமைப்பு வசதிகளைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் ஆகும்.*

***3. பிரச்சினைகள்***

*கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் கீழ் வருமாறு.*

I. *லங்கா லொஜிஸ்டிக் மற்றும் டெக்னொலொஜிஸ்ட் நிறுவனம் திணைக்களத்தினூடாக நடைபெற வேண்டிய பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை கண்டறிதல், லங்கா லொஜிஸ்டிக் என்ட் டெக்னொலொஜிஸ்ட் நிறுவனத்திற்கான கொடுப்பனவுகள் சம்பந்தமான செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்படாமையினால் இரு தரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை.*

II. *சேவை வழங்குனரை தெரிவு செய்தல் தாமதமடைதல்*

III. *திணைக்கள வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருக்கும் கருத்திட்ட கிளையில் இட வசதி காணப்படாமை*


IV. *கருத்திட்டம் நடைமுறைப்படத்தப்படும் காலகட்டத்தில் திணைக்களத்திற்காக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பத்தரமுல்லை கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளதால், கருத்திட்டத்திற்கு தேவையான நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை மேற் கொள்வதில் சிரமம் காணப்படல்.*

V. *2013 ஆம் ஆண்டில் தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கையை பூரணப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 470 மில்லியக் ரூபா மூலதனம் குறைவாகக் காணப்படுதல்*

**இணைப்பு I**

**சட்டப் பிரிவு - 2011 ம் ஆண்டு**

| மாதம் | பொலிஸ் விடுகைப்பத்திரம் | வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | | |
| பெப்ரவரி | 1665 | |
| மார்ச்சு | 1684 | 525 |
| ஏப்பிரல் | 1428 | 286 |
| மே | 1903 | 462 |
| ஜூன் | 1703 | 751 |
| ஜுலை | 1678 | 909 |
| ஆகஸ்ட் | 1572 | 817 |
| செப்டம்பர் | 1491 | 822 |
| ஒக்டோபர் | 1855 | 876 |
| நவம்பர் | 1886 | 725 |
| டிசம்பர் | 1605 | 570 |
| மொத்தம் | 18470 | 6743 |



இணைப்பு II



# ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: 227 **திணைக்களம்:** ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களம்

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல. | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய மீதி சேமிப்பு (மிகை) 4-5 | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 1 | **மீண்டுவரும்**<br>இயக்க நிகழ்ச்சித் திட்டம் | 203,440,000 | 1,100,000 | 4750000/-4750000 | 204,540,000 | 175,212,890 | 29,327,110 | 2 |
| | **உபமொத்தம் (மீண்டுவரும்)** | **203,440,000** | **1,100,000** | **4750000/-4750000** | **204,540,000** | **175,212,890** | **29,327,110** | |
| 1 | **மூலதனம்**<br>இயக்க நிகழ்ச்சித் திட்டம் | 32,050,000 | 15,000,000 | | 47,050,000 | 42,520,951 | 4,529,049 | 2 |
| | **உபமொத்தம் (மூலதனம்)** | **32,050,000** | **15,000,000** | **0** | **47,050,000** | **42,520,951** | **4,529,049** | |
| | மீண்டுவரும் மொத்தம் | 203,440,000 | 1,100,000 | 4750000/-4750000 | 204,540,000 | 175,212,890 | 29,327,110 | |
| | மூலதனம் மொத்தம் | 32,050,000 | 15,000,000 | 0 | 47,050,000 | 42,520,951 | 4,529,049 | |
| | மொத்தக் கூட்டுத்தொகை | 235,490,000 | 16,100,000 | 4750000/-4750000 | 251,590,000 | 217,733,841 | 33,856,159 | |

இந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் இணைந்த பகுதியாக விபரமான நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளும் ஏனைய விபரமான கணக்கீட்டுக் கூற்றுக்களும் டிஜிஎஸ்ஏ 02 முதல் 10 வரையிலான படிவத்தில் பக்கம் 02 முதல் 18 வரையிலும் ஏனைய குறிப்புக்கள் பக்கம் 22 முதல் 26 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கிலுள்ள இலக்கத் தொகைகள், ஏனைய விபரமான கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்கள் யாவும் சரியானவை என்றும், தொடர்புடைய கணக்குகள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் சரியாகவும் காணப்படுகிறது என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றோம்.

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்: ... psc
GOTABAYA ...
திகதி: 28/03/2013
MINISTRY OF ... DEVELOPMENT
NO. 15/5, ... AWATHA,
COLOMBO 03.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: R. M. S. SARATH KUMARA
பதவி: COMMISSIONER GENERAL
திகதி: 19.03.2013
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS
No. C-45, KEPPETIPOLA ROAD
COLOMBO-05.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: J. M. U. P. JAYAMAHA
பதவி: Chief Accountant
திகதி: 19/03/2013
For Commissioner General of Registration of Persons.

# 2012 දෙසැම්බර් 31 දිනට අවසන් වර්ෂය සඳහා ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආදායම් ගිණුම් සාරාංශය
# 2012டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அரசிறைக் கணக்குகளின் பொழிப்பு
# Summary of the Revenue Accounts for the Government of the Democratic Socialist Republic of Sri Lanka
## for the year ended 31st December 2012

ආදායම් ගණනදීමේ නිලධාරි / அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தர் / Revenue Accounting Officer : පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ කොමසාරිස් ජනරාල් / ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் / Commissioner General of Registration of Persons

වියදම් ශීර්ෂ අංකය / செலவின தலைப்பு இல. / Expenditure Head No. 227

| ආදායම් සංකේතය/ அரசிறைக்குறியீடு/ Revenue code | ආදායම් සංකේත විස්තරය அரசிறைக்குறியீடு விவரணம் Description of Revenue Code | 2012 මූලික ආදායම් ඇස්තමේන්තුව மூல அரசிறை மதிப்பீடு 2012 Original Revenue Estimate 2012 | 2012 සංශෝධිත ආදායම් ඇස්තමේන්තුව திருத்திய அரசிறை மதிப்பீடு 2012 Revised Revenue Estimate 2012 | 2012 වර්ෂයේ ලද මුළු ශු. ආදායම (දළ ආදායම - ආදායම් ආපසු ගෙවීම්) சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய அரசிறை (அரசிறை மீளளிப்பு கழித்து மொத்த அரசிறை 2012 Total Net Revenue Collected (Gross Revenue less Revenue Refunds) 2012 | 2011 වර්ෂයේ ලද මුළු ශු. ආදායම (දළ ආදායම - ආදායම් ආපසු ගෙවීම්) சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய அரசிறை (அரசிறை மீளளிப்பு கழித்து மொத்த அரசிறை 2011 Total Net Revenue Collected (Gross Revenue less Revenue Refunds) 2011 |
|---|---|---|---|---|---|
| | | රු./ ரூபா/Rs. | රු./ ரூபா/Rs. | රු./ ரூபா/Rs. | රු./ ரூபா/Rs. |
| 20.03.02.03 | 1968 අංක 32 දරන පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ පනත යටතේ ගාස්තු<br>Fees under Registration of Persons Act no 32 1968<br>1968 இல.32ஐ உடைய ஆட்களைப்பதிவு செய்யும் சட்டத்தின் கீழான கொடுப்பனவு. | 69,200,000.00 | - | 83,760,894.00 | 90,640,027.00 |
| | එකතුව/ மொத்தம்/ Total | 69,200,000.00 | | 83,760,894.00 | 90,640,027.00 |

මෙම සාරාංශ ප්‍රකාශයෙහි සඳහන් සියළුම සංඛ්‍යා, පවත්වා ගෙන යනු ලබන ගිණුම් පොත්වල සඳහන් සංඛ්‍යා සමග එකඟවන බවත්, ඒවා භාණ්ඩාගාර ගිණුම් පොත් සමග සසඳන ලද බවත් සහතික කරමි.

இக்கணக்குகளில் காணப்படும் புள்ளி விவரங்கள் வைத்திருக்கப்படும் கணக்குப் புத்தகங்களிலுள்ள புள்ளி விவரங்களுடன் ஒத்திருக்கின்றன வெனவும் இப்புள்ளி விவரங்கள் யாவும் திறைசேரிக் கணக்குப் புத்தகங்களிலுள்ள புள்ளி விவரங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளன வெனவும் சான்றுப்படுத்தப்படுகின்றன.

Certify that the figures appear in this Summary Statement are in agreement with the figures in the Books of Account maintained and all these figures have been reconciled with the figures in the Treasury Books of Account.

දිනය / திகதி / Date 2013/03/22

ප්‍රධාන ගණකාධිකාරී / මුදල් අංශයේ ප්‍රධානියාගේ අත්සන සහ නම / பிரதான கணக்காளரின்/ நிதிப்பகுதித் தலைவரின் கையொப்பமும் பெயரும். / Signature and Name of Chief Accountant/Head of Finance

ආදායම් ගණනදීමේ නිලධාරි නම, තනතුර සහ අත්සන / அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பமும், பெயரும், பதவியும் / Signature, Name and Designation of Revenue Accounting Officer

ආර්. එම්. එස්. සරත් කුමාර
කොමසාරිස් ජනරාල්
පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
අංක සී-45, කැප්පෙටිපොල පාර
කොළඹ-05.

## பணியாற்றொகுதி விபரம்2012.12.31
## பணியாளர் எண்ணிக்கை பற்றிய விபர அறிக்கை (பணியாற்றொகுதி)

| பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | பற்றாக்குறை எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| ஆணையாளர் | 2 | 2 | - | - |
| முதன்மைக் கணக்காளர் | 1 | 1 | - | - |
| பிரதி/உதவி ஆணையாளர் | 12 | 9 | 3 | - |
| பிரதி/உதவி இயக்குனர் | 1 | 1 (பதிற் கடமை) | 1 | - |
| கணக்காளர் | 1 | 1 | - | - |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | - | 1 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 2 | 1 | 1 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 2 | - | 2 | - |
| வரவு செலவு உதவியாளர் (தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் நியமிக்கப்படல் தொடர்பாக ) | 1 | 1 | - | - |
| கட்டாய அலுவலர்கள் | 75 | 70 | 5 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 282 | 173 | 109 | - |
| தகவல்தொடர்பாடல்தொழிநுட்ப உதவியாளர் | 10 | 9 | 1 | - |
| சாரதி | 8 | 7 | 1 | - |
| அலுவலக பனியாளர் | 51 | 45 | 6 | - |
| படல இயந்திர இயக்குனர் | 2 | 2 | - | - |
| தயாரிப்பு உதவியாளர் | 67 | 65 | 2 | - |
| ஆவண உதவியாளர் | 11 | 10 | 1 | - |